**04-04-2023** காலை முரளி ஓம் சாந்தி பாப்தாதா மதுபன்

இனிமையான குழந்தைகளே! தேகத்துடன் கூடவே தேகத்தின் அனைத்து சம்மந்தங்களுக்கும் டிரஸ்டி ஆகுங்கள். எல்லாவற்றையும் பராமரித்துக் கொண்டு, எதன் மீதும் மோகம் வைக்காதிருங்கள்.

கேள்வி: இந்த டிராமாவில் மாயா எந்தப் தவறுகளைச் செய்ய வைக்கின்றது, அப்போது பாபா தவறிழைக்காதவர்களாக ஆக்க வருகின்றார்?

பதில்: முதல் தவறு, பிரம்ம தத்துவத்தையே பரமாத்மா என நினைத்தது. தத்துவத்துடன் யோகா (நினைப்பது) வைப்பது என்பது மித்யா (பொய்யானது, தவறானது). இதனால் விகர்மம் வினாசமாகாது.

2. இந்துஸ்தானில் வசிக்கிற காரணத்தால் தேவி-தேவதா தர்மத்திற்கு பதில் தங்கள் தர்மம் இந்து தர்மம் என்று சொல்வதும் பெரிய தவறாகும். இந்த தவறை செய்ததன் காரணத்தால் தர்மத்திற்கு சக்தியின்றிப் போய் விட்டது. உங்களைப் தவறிழைக்காதவர்களாக ஆக்குவதற் காக இப்போது பாபா வந்திருக்கிறார்,

பாடல் : என் மனம் என்ற வாசலில் வந்தவர் யார்......

ஓம் சாந்தி. குழந்தைகளிடம் வந்தவர் யார்? குழந்தைகளிடம் தாய்-தந்தையர் தானே வருவார் கள்? அவர்களுக்காகத் தான் பாடல் உள்ளது, நீங்கள் தான் தாயும் தந்தையும், நாங்கள் உங்கள் பிள்ளைகள். இப்போது நீங்கள் பாலகர் என்ற நிலையில் அமர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? பரமபிதா பரமாத்மா அமர்ந்து குழந்தைகளுக்குச் சொல்லிப் புரியவைக்கிறார், நான் நிராகார். பிரம்மா-விஷ்ணு-சங்கரும் கூட இப்படிச் சொல்ல முடியாது. இதை நிராகார் பரமபிதா பரமாத்மா மட்டுமே சொல்ல முடியும் இந்த சரீரத்தின் மூலமாக. இதையோ நீங்கள் அறிவீர் கள், எனக்கு எந்த ஒரு ஸ்தூல அல்லது சூட்சும சரீரமும் கிடையாது. இந்த ஆத்மா தான் சரீரத்தின் மூலம் பேசிக் கொண்டிருக்கிறது. நிராகார் பரமபிதா பரமாத்மா அமர்ந்து குழந்தை களுக்குக் கற்றுத் தந்து கொண்டிருக்கிறார். புதியவர்கள் யாராவது கேட்டால் இது எப்படி முடியும் எனக் கேட்பார்கள். ஆம், சிவபகவான் வாக்கு, பிரம்மாவின் சரீரத்தின் மூலம். சிவபாபா வுக்குத் தன்னுடைய சரீரம் என்று எதுவும் கிடையாது. அப்படி யானால் இத்தனை பிராம்மா குமார்கள், குமாரிகள் அனைவரும் எங்கிருந்து வந்தார்கள்? அந்த (வெளியுலக) பிராமணர்கள் தங்களை பிரம்மாகுமார் எனச் சொல்லிக் கொள்வதில்லை. நீங்கள் உறுதிப்படுத்திச் சொல்ல முடியும், இந்த பிரம்மாவின் தந்தை பரமபிதா பரமாத்மா சிவன். அவருடைய குழந்தைகள் இந்த மூவராகிய பிரம்மா, விஷ்ணு, சங்கர். ஆக, சிவபாபா இந்த பிரம்மாவின் வாயின் மூலம் முக (வாய்வழி) வம்சாவளியைப் படைத்து அவர்களை மனித-ருந்து தேவதையாக ஆக்குகிறார். இவ்வுலகில் மனிதர்கள் ஏராளமாக உள்ளனர். அநேகவிதமான வெவ்வேறு தர்மங்கள், சாதிகள் உள்ளன. குஜராத்தி, பஞ்சாபி, மராட்டி, உ.பி., கிறிஸ்தவர், பௌத்தர் முதலிய எத்தனை விதமான தர்மங்கள், சாதிகளின் பெயர்கள் உள்ளன! சத்யுகத்தில் இத்தனை தர்மங்கள் சாதிகள் இருக்காது. அநேக மொழிகளும் இருக்காது, அனேக தர்மங்களும் இருக்காது. ஒரே இராஜ்யம் வேண்டும் எனச் சொல்லவும் செய்கிறார்கள். சத்யுகத்தில் தேவி-தேவதா தர்மம் தான் இருக்கும். பாபா சொல்கிறார், நான் வந்து ஒரு ஆதி சனாதன தேவி-தேவதா தர்மத்தை ஸ்தாபனை செய்கிறேன். மனிதர் களை

தேவதையாக்குவதில் பகவானுக்கு அதிக நேரம் பிடிக்காது என்று பாடவும் பட்டுள்ளது (குரு கிரந்த் சாகப்). தேவதைகள் இருப்பது சத்யுகத்தில், திரேதாவிலும் கூட இருப்ப தில்லை. திரேதாவில் இருப்பது சத்திரிய வர்ணம். சாஸ்திரங்களிலும் எழுதப் பட்டுள்ளது, பிரம்மா வாயிலிருந்து பிராமணர்கள் வெளிப்பட்டனர், பிராமணர்களுக்குப் படிப்பு சொல்லித் தந்து பிறகு தேவதை மற்றும் சத்திரிய தர்மத்தின் ஸ்தாபனை செய்கிறார். மற்றப்படி இருக்கும் அநேக தர்மங்கள் வினாசமாக வேண்டும். பாபா சொல்லிப் புரிய வைக்கிறார், இனிய குழந்தை களே! நான் ஆத்மாக்களாகிய உங்களுடைய உண்மையிலும் உண்மையான தந்தை. நான் ஒருபோதும் மாறுவதில்லை. என்னை எப்போதுமே தந்தை என்ற நிலையில் வைத்துத் தான் நினைவு செய்கிறீர்கள். பக்தர்கள் பகவானை நினைவு செய்கின்றனர், ஏனெனில் இந்தக் கல்வியை பகவான் தவிர வேறு யாரும் தரமுடியாது. இப்போதோ அநேக தர்மங்கள் உள்ளன. நீங்கள் அவற்றைப் பட்டியலிட முடியாது. எவ்வளவு மனிதர்கள்! பாபா வந்து மனிதரிலிருந்து தேவதையாக ஆக்குகின்றார். அதுவும் அனைவரையும் ஆக்க மாட்டார். இவை புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள். பாபா சொல்கிறார், என்னைத் தவிர வேறு யாரும் இதைச் சொல்லிப் புரியவைக்க முடியாது. பாபா அமர்ந்து குழந்தைகளாகிய உங்களுக்கு சத்யுகத்திற்காகப் படிப்பு சொல்லித் தருகின்றார். அவர் சொல்கிறார், குழந்தைகளே! இப்போது எவ்வளவு முயற்சி செய்து சொர்க்கத்தில் உயர்ந்த பதவி அடைய முடியுமோ அடைந்து கொள்ளுங்கள். மனிதர்கள் ஒவ்வொருவருமே தங்களது வாழ்க்கையை நடத்திச் செல்வதற்காக எவ்வளவு முயற்சி செய்கிறார்கள்! துப்புரவுத் தொழிலாளியும் கூட நன்றாகப் படித்தால் நல்ல பதவி அடைய முடியும். இங்கும் பாபா சொல்கிறார், அபலைகளுக்கும் கணிகைகளுக்கும் கூட முயற்சி செய்வதன் மூலம் சூரியவம்சி ராஜபதவி கிடைக்கும்.

பாபா சொல்லிப் புரிய வைத்திருக்கிறார், இச்சமயம் ஒவ்வொரு திரௌபதியும் பாபா, காப்பாற்றுங்கள் என்று அழைக்கின்றனர். பிறகு கிருஷ்ணர் மேலே அமர்ந்திருப்பதாகக் காட்டு கின்றனர். சேலைகள் திரௌபதிக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. பாதுகாப்பு கிடைக் கின்றது. இப்போது அதுபோன்ற விஷயங்கள் எதுவும் கிடையாது. இதெல்லாம் இச்சமயத்தின் விஷயங்கள். பாபா சொல்கிறார், உங்களை 21 பிறவிகளுக்கு மானபங்கம் ஏற்படும் நிலை வராமல் நான் பாதுகாக்கின்றேன். உங்களை யாராலும் மான பங்கம் செய்ய முடியாது. இது இல்லற மார்க்கம், இருவருமே தூய்மையாக ஆகவேண்டும். அரைக்கல்பமாக விகாரங்களில் ஈடுபட்டு தோல்வி யடைந்தே வந்திருக்கிறீர்கள் என்றாலும் இந்தப் பழக்கம் நீங்குவதில்லை. பாபா வந்து உங்களை மானபங்கம் ஆவதிலிருந்து பாதுகாக்கின்றார். இதில் மிகுந்த முயற்சி செய்ய வேண்டியுள்ளது. தூய்மையாக இருக்கும் போதே கூட மாயா வந்து போராடுகின்றது. அபலைகளுக்கோ விஷமாகிய விகாரத்தின் காரணத்தால் அநேகக் கொடுமைகள் நடைபெறு கின்றன. மேலும் குழந்தைகளிடம் மோகமும் இருக்கின்றது. இதிலோ முழுமையாகப் பற்றற்ற வர்களாக ஆகவேண்டும். முதல் முதலில் பட்டி நடந்த போது மிகுந்த துணிச்சலுடன் பாபா விடம் ஓடோடி வந்தனர். அடி கிடைக்கிறது, தொந்தரவு செய்கிறார்கள் என்பதைப் பார்த்தவுடன் தியாகம் செய்துவிட்டனர். சந்நியாசிகளும் கூட ஓடுகின்றனர். முதலில் அவர்களை நினைவு வாட்டுகின்றது. பற்றற்ற நிலை அடைவதில் முயற்சி செய்யவேண்டி உள்ளது. ஏனென்றால் அவர்களிடம் பிராப்தி யினுடைய

நோக்கம், குறிக்கோள் எதுவும் இல்லை. எந்த ஒரு சக்தியும் கிடைப்பதில்லை. உங்களுக்கோ சக்தி கிடைக்கின்றது. அவர்களுக்கு தூய்மையின் சக்தி எங்கிருந்து கிடைக்கும்? தூய்மையின் கடலாக இருப்பவரோ ஒரே ஒரு பரமபிதா பரமாத்மா. அவரிடமிருந்து தான் அந்த ஆஸ்தி கிடைக்கின்றது. அந்தத் தந்தையிடமோ யோகத்தை வைப்ப தில்லை. பிரம்மத்திடம் யோகம் வைக்கின்றனர் ஆகையால் முழு தூய்மை அடைய முடியாது. பிரம்மம் அல்லது தத்துவத்தோடு யோகம் வைப்பதென்பது பொய்யானதாகிவிடுகின்றது. பாருங்கள், இந்தக் குறிப்புகளை நன்றாக தாரணை செய்ய வேண்டும். தவறுகளோ நிறையவே செய்தாயிற்று. இந்துஸ்தானில் வசிப்பவர்கள் இந்து தர்மம் என்று சொல்லி விடுகின்றனர். இதுவும் கூட தவறு தான். பிரம்மம் அல்லது தத்துவத்தைப் பரமாத்மா எனச் சொல்வதும் தவறாகும். டிராமாவிலும் விதிக்கப்பட்டுள்ளது. பாபா வந்து புரிய வைக்கிறார், இவ்வாறாக தவறுகளை மாயா செய்விக்கின்றது. பாபா வந்து பிறகு தவறு செய்யாதவர்களாக ஆக்கு கின்றார். சத்யுகத்தில் ஒரே தர்மம், ஒரே மொழி இருந்தது. பிருந்தா வனத்தில் வசிப்பவர்களை பிருந்தாவனி என்பதில்லை. அங்கே தர்மமே ஒன்று தான். பாபா சொல்கிறார், உங்களை மீண்டும் அதே தேவி-தேவதையாக ஆக்குவதற்காகவே நான் வருகிறேன். நீங்கள் சொர்க்கத் தின் எஜமான் ஆகிவிடுகிறீர்கள். பாபா சொர்க்கத்தைப் படைப்பவர் என்றால் பிறகு நாம் ஏன் நரகத்தின் எஜமானனாக இருக்கிறோம்? புதிய உலகத்தில் நிச்சயமாக நாம் சொர்க்கத்தின் எஜமானராக இருப்போம். அச்சமயம் மற்ற அனைத்து ஆத்மாக்களும் பரந்தாமத்தில் இருப்பார் கள். இந்த விஷயங்கள் இப்போது உங்கள் புத்தியில் உள்ளது. எவ்வளவுக்கெவ்வளவு யோகா இருக்குமோ அவ்வளவுக்கு தாரணை நன்றாக இருக்கும். எங்கேயும் மோகம் வைத்திருக்கக் கூடாது. தன்னை டிரஸ்டி என உணர்ந்து பாலனை செய்யுங்கள். அனைத்துமே பாபாவிடம் அடகு வைக்கப்பட்ட (அர்ப்பணிக்கப்பட்ட) பொருள்களாகும். தேகத்துடன் கூடவே தேகத்தின் அனைத்து சம்மந்தங்களுக்கும் நாம் டிரஸ்டியாக இருக்கிறோம். பரீட்சைகளும் வருகின்றன. யாராவது நோய்வாய்ப்பட்டால், துக்கத்தில் வந்தால் கவனித்துக் கொள்ள வேண்டும். இவ்வுலகமே துக்கத்தின் உலகம். சிவபாபாவுக்கோ எந்த ஒரு துக்கமும் ஏற்படாது. அவரோ டிரஸ்டியாக இருப்பவர். யாருக்காவது ஏதாவது ஆகிவிட்டால் சொல்வார், தனது கணக்கு வழக்கை முடித்து விட்டுப் போய் வேறு சரீரத்தை எடுத்தாயிற்று, இதில் என்னுடையது என்ன இருக்கிறது? இவ்வளவு மனிதர்கள் அனைவருமே சரீரம் விடுவார்கள், சிவபாபாவுக்கு துக்கம் இருக்குமா என்ன? இன்னும் கூக்குரல் ஏற்படும். இந்தப் பழைய சரீரங்களை விடச் செய்து குழந்தைகளைத் திரும்ப அழைத்துச் செல்வேன். துக்கத்தின் விஷயமே இல்லை. வருத்தத் திற்கான எந்த ஒரு விஷயமும் இல்லை. நாம் அமரும் போதும் எழுந்திருக் கும் போதும் இனிமையிலும் இனிமையான பாபாவை நினைவு செய்கிறோம். பரந்தாமத் திற்குச் செல்வதற் காக நாம் தயாராகிக் கொண்டிருக்கிறோம். பாபாவை நினைவு செய்து- செய்தே சரீரம் விடுபட்டு விடும். அதுபோல் அநேக சந்நியாசிகளுக்கும் ஆகின்றது. அமர்ந்திருக்கும் போதே, நாம் பிரம்மத்திற்குப் போய்விடு கிறோம், போய் ஐக்கியமாகி விடுவோம் என நினைக்கின்றனர். இதுபோல் அமர்ந்து-அமர்ந்தே சரீரம் விட்டு விடு கின்றனர். பிரம்மா பாபா தமது அனுபவத் திலிருந்து சொல்கிறார். பிராணாயாமம் செய்து கொண்டிருக்கும் போதே மறைந்துபோய் விடுகின்றனர். அந்த ஆத்மா பிரம்மத்தில் போய்ச் சேர்ந்து விடும் என்பதெல்லாம் இல்லை. ஆத்மாவோ ஒரு சரீரம் விட்டதும் உடனே வேறு

சரீரம் எடுத்துக் கொள்கிறது. மற்றப்படி யாரும் நிர்வாண் (சப்தத்திற்கு அப்பாற்பட்ட) உலகிற்குச் செல்வதில்லை, ஜோதியோடு ஜோதியாக ஐக்கியமாவதும் இல்லை. அனைவரும் கண்டிப்பாக அவர்களது பாகத்தை நடித்தாக வேண்டும்.

பாபா சொல்கிறார், நடிகர்கள் அனைவரும் எப்போது இங்கு ஆஜராகின்றார்களோ, அப்போது நான் வருகிறேன். ஏனென்றால் நான் பிரியதரிசினிகளான உங்கள் அனைவருக்குமான பிரியதரிசன். என் பின்னால் பிரிய தரிசினிகள் அனைவரும் திரும்பி வருவார்கள். அனைவரையும் திரும்ப அழைத்துச் செல்வதற்காக நான் வந்திருக்கிறேன். இப்போது நாடகம் முடிவடைகின்றது. இப்போது யார் எவ்வளவு புருஷார்த்தம் செய்கிறார்களோ அதைப் பொருத்தது தான். சத்கதி யளிப்பவர் ஒரு பாபா மட்டுமே. இப்போது பாபா வந்திருக் கிறார், நான் எப்போது எப்படி வருகிறேன் என்று சொல்லிப் புரிய வைத்துக் கொண்டி ருக்கிறார். பிறகு ஆத்மாக்களாகிய உங்களனைவரையும் அழைத்துச் செல்கிறேன். அசுத்த நிலையிலிருந்து மணமுள்ள மலராக மாற்றுகின்றேன். மணமுள்ளவர்கள் தான் பலியாவார்கள் (சமர்ப்பணமாவார்கள்). கிருஷ்ணர் (பெண்களை) விரட்டியதாகக் காட்டுகின்றனர். ஆனால் எதற்காக விரட்டினார்? கிருஷ்ணரின் விஷயம் எதுவும் இல்லை. இதுவோ, பாபா (துக்கத்தி-ருந்து) விடுவித்திருக்கிறார் சகஜ இராஜ யோகம் கற்பித்து சொர்க்கத்தின் மகாராஜா மகாராணி ஆக்குவதற்காக. உங்களுக்கு சாட்சாத் காரமும் ஆகியிருக்கிறது, வருங்கால இளவரசர் இளவரசி ஆவதாக. நீங்கள் அறிவீர்கள், நிச்சயமாக நாம் மயிலிறகு சூடிய கிரீடதாரி இளவரசர் இளவரசியாக ஆவோம். இப்போது நீங்கள் பிராமணர். பிரஜாபிதா பிரம்மா என்று பாடப் படுகின்றது. ஆக, அவருடைய குழந்தைகள் பிரம்மாகுமார் குமாரிகள் ஆகிறீர்கள். இவ் விஷயங்கள் புரிந்து கொள்ளவும், புரிய வைக்கப்படவும் வேண்டியவை. இராஜதானி ஸ்தாபனையாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே அனைவரும் நன்றாக முறைப்படி புருஷார்த்தம் செய்ய வேண்டும். எந்தக் கஷ்டமும் கொடுக்க வில்லை, ஹே ஆத்மா, தந்தையாகிய என்னை நினைவு செய், ஆஸ்தியை நினைவு செய் என்று மட்டுமே சொல் கின்றார். உலகின் எஜமான் ஆவதற்காக இவ்வளவாவது நினைவு செய்வீர்கள் இல்லையா? ஆத்ம அபிமானி ஆகுங்கள். தேக அபிமானம் வருவதால் தான் மாயா அடி கொடுக்கின்றது. மாயா இதுபோல் செய்கிறது, பகவான் இவ்வாறு செய்கிறார் என்பதாக ஒரு நாடகமும் உருவாக்கப்பட்டுள்ளது. நீங்கள் நடைமுறையில் பார்க்கிறீர்கள், எத்தனைப் பேர் பாபா வுடையவர்களாக ஆகிப் பிறகு முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விடுகின்றனர். போய் நிந்தனை செய்கின்றனர். ஆச்சரியப்படுமாறு கேட்கின்றனர், மற்றவர்களுக்குச் சொல்கின்றனர், பிறகு ஓடிப்போய் விடுகின்றனர். சத்யமான தந்தை, சத்யமான ஆசிரியர், சத்யமான குருவுக்கு நிந்தனை செய்கின்றனர். அவர்களைப் பார்த்து மனிதர்கள் கேட்கிறார்கள், ஈஸ்வரனின் கையை விட்டு இவர்கள் எப்படிப் போயிருப்பார்கள்? ஆக, இதுபோல் நிந்தனை செய்பவர் கள் உயர்ந்ததிலும் உயர்ந்த பதவியை அடைய முடியாது. இது இப்போதைய விஷயம்.

அநேகக் குழந்தைகளுக்கு, பற்றற்றவர்களாக ஆவதில் மிகுந்த முயற்சி செய்ய வேண்டியுள்ளது. அநேகருக்கு மோகம் நீங்குவதே இல்லை. பாபாவோ

சொல்கிறார், குழந்தைகளையும் கவனித்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கும் கூட சிவபாபாவை நினைவு படுத்திக் கொண்டே இருங்கள். யார் நல்லவர் களாக இருக்கிறார்களோ, அவர்கள் சிவபாபாவை நினைவு செய்து கொண்டே இருப்பார்கள். பாபா சொல்கிறார், அரசாங்கமும் கூடத் தூய்மையை விரும்புகின்றது. ஆகவே அரசாங்கத்திற்குச் சொல்ல வேண்டும், நாங்கள் பாரதத்தை தூய்மையான நிலையில் கொண்டு வருவதற்காகத் தூய்மையின் உறுதிமொழியை மேற்கொண்டிருக்கிறோம். நாங்கள் பாரதத்தை நிச்சயமாக சொர்க்கமாக மாற்றுவோம். கன்யர்கள், தங்களின் தாய்-தந்தையைக் கூட உய்விக்க முடியும். பாபாவோ ஏழைப்பங்காளர் எனப்படுகின்றார். பணக்காரர்களுக்கோ, அவர்களுடைய செல்வம், பொருள்கள் முழுவதுமே மண்ணோடு மண்ணாகி விடும். பணக்காரர் களுக்கு மிகுந்த சக்தி வேண்டும். ஏனென்றால் கூட்டு குடும்பமாக இருக்கும், இல்லையா? பிறகு தங்கள் பொருட்களை எப்படி அர்ப்பணம் செய்ய முடியும்? பாபாவோ ஏழைப்பங்காளர் எனப் பாடப்பட்டுள்ளார். நல்லது.

இனிமையிலும் இனிமையான, வெகுகாலம் கழித்து, காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய், தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. நோக்கம், குறிக்கோளை புத்தியில் வைத்து, தூய்மை ஆவதற்காக முழு பற்றற்றவர்களாக ஆக வேண்டும். பழைய சரீரங்களின் மீதுள்ள மோகத்தை விட்டுவிட வேண்டும்.

2. அமரும்போதும் எழுந்திருக்கும் போதும் பாபாவின் நினைவிலேயே இருக்க வேண்டும். எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும் வருத்தம் கொள்ளக் கூடாது. பாபாவின் பெயரைக் கெடுக்கின்ற எந்த ஒரு காரியத்தையும் ஒரு போதும் செய்துவிடக் கூடாது.

வரதானம்: எப்பொழுதும் சிநேகம் மற்றும் சகயோகம் (ஒத்துழைப்பு) மூலமாக அவினாஷி (அழியாத) இரத்தினம் என்ற டைட்டில் - பட்டத்தை பெற்று விடக் கூடிய அமரர் ஆவீர்களாக.

யார் ஸ்தாபனையின் காரியத்தில் எப்பொழுதும் சிநேகி மற்றும் சகயோகியாக இருக் கிறார்களோ, அவர்களுக்கு அவினாஷி இரத்தினத்தின் டைட்டில் கிடைத்து விடுகிறது. அப்பேர்ப்பட்ட அவினாஷி இரத்தினங்களை ஒரு பொழுதும் யாரும் அசைத்து விட முடியாது. எந்தவொரு தடங்கலும் தடுக்க முடியாது. அப்பேர்ப்பட்ட அவினாஷி இரத்தினங் கள் தான் அமரபவ என்ற வரதானத்திற்குரியவர்கள் ஆவார்கள். ரியல் கோல்டு - உண்மை யான தங்கம் ஆவார்கள். தந்தையின் துணையாளர் ஆவார்கள். அவர்கள் தந்தையின் காரியத்தை தன்னுடையது என்று உணர்ந்திருப்பார்கள். எப்பொழுதும் கூட இருப்பார்கள். எனவே அவினாஷி ஆகி விடுகிறார்கள்.

சுலோகன்: தூய்மையின் சரியான (யதார்த்தமான) தாரணை இருந்தால், ஒவ்வொரு செயலும் பொழுதும் சரியானதாக மற்றும் யுக்திகளுடன் கூடியதாக இருக்கும்.